**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

**Published on 14, Jan-2025** **ISSN: 3049-2688 (Online)**

# புறநானூற்றில் போருக்கான காரணங்கள்

முனைவர் சகோ. ஜா. அருள் சுனிலா
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர்
தன்னாட்சிக் கல்லூரி
பெரியகுளம், தேனி – 625601, தமிழ் நாடு, இந்தியா

### ஆய்வு முன்னுரை

மனித குலம் நன்கு தழைக்க பகைமை மறந்த அன்பே சீரிய பாதையாகும். ஆனால் மனிதகுலத்தைச் சீரழிக்கும் அழிவுச் சக்தியாய் போர் மனித வாழ்வில் காலந்தோறும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. வீரத்தையும் தனது புகழை நிலைநாட்ட வேண்டுமென்ற ஆவலும், நான், எனது என்ற குறுகிய வட்டத்திற்குள் வாழும் போக்கும் போர் எழத் தூண்டுதல் ஆகின்றன. மனிதனை மனிதன் மதிக்காமல் செயல்படும் மனித உரிமை மீறல்களும், தான் நினைத்ததைச் சாதிக்க வேண்டுமென்ற வெறித்தனப் போக்கும் போருக்குப் பெரிதும் காரணமாகின்றன. சங்க காலத்தில் நடைபெற்ற போருக்கான காரணங்களை, புறநானூறு வழியாக ஆராய்வதாக இந்த ஆய்வும் அமைகிறது.

### ஆய்வுச் சுருக்கம்

மனித இனத்தின் தொடக்க காலத்தில் மனிதன் குழுவாக, ஓர் இனமாகக் கூடி வாழ்ந்த போது உணவுக்காகவும், கொல்லும் விலங்குகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும் போர் புரிந்தான். மனித இனம் பெருக, அதனை வாழ வைக்க ஆநிரை கவர்தலும், மீட்டலும் போருக்குரிய முதன்மைக் காரணங்களாய் இருந்தன. அதனைத் தொடர்ந்து மறப்பண்பு, மண்ணாசை, பொருளாசை, பெண்ணாசை, புகழாசை என்ற பல காரணங்களுக்காகப் போர்கள் பெருகத் தொடங்கின. இதனைப் புறநானூறு தெளிவாக எடுத்துரைப்பதை ஆய்வதாக இந்த ஆய்வுக் கட்டுரையும் அமைகிறது.

### மண்ணுக்காகப் போர்

பிறநாட்டு வளங்களையும், செல்வங்களையும் காணும் மன்னர்கள், அதனை அடையும் பொருட்டும், நாடுபிடிக்கும் வேட்கையை முன்னிட்டும், நாட்டின் எல்லையை விரிவாக்குவதை நோக்கமாகக் கொண்டும் பகைவரால் கவரப்பட்ட நாட்டினைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் போர் நிகழ்த்துவதுண்டு.

**"எஞ்சா மண்நசை, வேந்தனை வேந்தன்**
**அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தன்று"[1]**

என்று தொல்காப்பியம் இதனைக் குறிப்பிடுகின்றது. மண் ஆசை காரணமாக பல்யாக சாலை முதுகுடுமிப் பெரு வழுதியின் வீரர்கள் யானைகளைச் செலுத்தி, பசுமை நிறைந்த நெல் வயல்களைச் சூழ்ந்த கோட்டை மதில்களைக் கைப்பற்றியதை,

**"செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தே எத்துக்**
**கடற்படை குளிப்பமண்டி யடர்ப்புகர்ச்**
**சிறுகண் யானை செவ்விதி னேவிப்**
**பாசவற் படப்பை யாரெயில் பலதந்**

தவ்வெயிற் கொண்ட
செய்யுறு நன்கலம்” (புறம்.6)

என்னும் பாடலால் காரிக்கிழார் எடுத்துரைக்கிறார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பார்த்து, பரிசில் வேண்டிப் புலவர்கள் எல்லாம் உன்னைப் பார்க்க, நீயோ இரு மன்னர்களின் நிலத்தைக் கொள்ள நோக்கினாய் என்பதை,

“புலவர் எல்லாம் நின்
நோக்கினரே;

நீயோ, . . . . . . . . . . . . . .

கூற்று வெகுண்டனன் முன்பொடு,

மாற்று இரு வேந்தர் மண்
நோக்கினையே” (புறம்.42)

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. தன் நாட்டு மன்னன் பகைநாட்டில் போர்புரிந்து அவன் மண்ணைக் கைப்பற்றவும், அப்போரில் ஈடுபடும் தம் கணவர் வெற்றி பெற்று, செல்வத்துடன் வந்து விருந்து கொடுத்து பிறரை மகிழ்விக்கும் வாழ்வு தனக்கு அமைய வேண்டுமெனவும் மறக்குடிப் பெண்ணொருத்தி நடுகல்லை வணங்குவதை,

“விருந்து எதிர் பெறுகதில் யானே,
என்னையும்

ஒ . . . . . . . . . . . . வேந்தனோடு

நாடுதரு விழுப்பகை எய்துக
எனவே” (புறம்.306)

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. பிறநாட்டு மண்ணைக் கவரவேண்டுமென்ற மன்னனின் ஆவல் பகைநாட்டை, அந்நாட்டு மக்களைச் சூறையாடச் செய்யும் கொடுஞ் செயலுக்கு உட்படுத்துவதுடன், சொந்த நாட்டிலே அமைதியின்றி வாழக்கூடிய நிலைக்கு இட்டுச் செல்வதை உணர முடிகிறது. சங்க காலத்தில் தொடங்கப்பட்ட மண்ணுக்கான போர் காலங்காலமாய் நாடுகளுக்கிடையே தொடர்ந்து நடைபெற்று வருவதைப் பார்க்க முடிகிறது.

## பொருளுக்காகப் போர்

வீரர்கள் பகைநாட்டுச் செல்வமாகக் கருதப்படும் ஆநிரைகளைக் கவருவதிலும், மன்னனின் மணிமுடி, முரசு, இவைகளைக் கைப்பற்றுவதிலும் ஆர்வம் கொண்டு போருக்கெழுந்தனர். பேரரசனாக விளங்கும் மன்னன் பலசிறு நாடுகளைத் தன் வசப்படுத்தி திறை செலுத்தப் பணிப்பான். குறிப்பிட்ட நாட்களுக்குள் திறை செலுத்தவில்லையெனில் அந்நாட்டின் மேல் படையெடுத்துச் செல்வான். இத்தகையப் போரைத் தவிர்க்க, பொன்னும், பொருளும், வாசனைத் திரவியங்களும் என்று அரசன் வேண்டுவதைத் திறையாகச் செலுத்துவர். திறை செலுத்த இயலாத போதோ, விரும்பாதபோதோ போர் நிகழ்வதைத் தவிர்க்க இயலாது போர் நடைபெறும். பகையரசனோடு போர் செய்யக் கருதி பகைவர் நாடுசென்று ஆநிரைகளைக் கவர்ந்து, அவைகளைப் பிறருக்கு வழங்கி இன்புற்று மகிழ்வதை,

“வேந்து விடு முனைஞர் வேற்றுப்புலக்
களவின்

ஆதந்து ஓம்பல் மேவற் றாகும்”[2]

என்று தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார். மேலும், தந்து நிறை, பாதீடு, உண்டாட்டு, கொடை என வெட்சித் திணையில் இதனைப் பகுத்துரைக்கிறார். புறநானூற்றில் 257, 258, 269, 297 எனும் பாடல்கள் நிரைகவர்தல் பற்றியன.

“புல்லார் இனநிரை செல்புறம் நோக்கி,

கையின் சுட்டிப் பையென எண்ணி,

சிலையின் மாற்றியோனே; அவைதாம்

மிகப்பல வாயினும் . . . . .” (புறம்.257)

என்னும் பாடலும், புறம்.269 என்னும் பாடலும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. செல்வக் கடுங்கோ வாழியாதனுடன் போர் செய்து தோற்ற மன்னர்கள் திறைப்பொருள் தந்தனர். இதனை,

“பகைப்புல மன்னர் பணிதிறை தந்து

நகைப்புல வாணர் நல்குரவு
அகற்றி” (புறம்.387)

என்ற வரிகளால் அறியலாம்.

“. . . திறைதந்த களிற்றொடு நெல்லின்

அம்பண வளவை விரிந்துறை போக்கிய

ஆர்பத நல்கு மென்ப கறுத்தோர்”[3]

என்ற பதிற்றுப் பத்துப் பாடல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மன்னர்கள் தனக்குத் திறை கொடுக்க மறுக்கின்ற பகைவர்கள் மீது சினம் கொண்டு போருக்கெழும் போது இவனுக்குத் திறைச்செலுத்தினால் வாழலாம். இல்லையேல் இறப்புதான் மிஞ்சும் என்று திறை செலுத்துவதையும் புறநானூற்றில் காணலாம். இதனையே,

"நின்றீமின் மன்னீர்

நெடுநல் திறை கொணர்ந்து"[4]

என்னும் முத்தொள்ளாயிரப்பாடல் திறை செலுத்துவதை எடுத்துரைக்கின்றன. பொரு ளாசை மன்னர்களைப் போர் செய்யத் தூண்டுவதாக அமைவதுடன் தனக்குக் கீழ் பல மன்னர்கள் பணிந்திருக்க வேண்டு மென்ற மனநிலையை மன்னர்களிடம் உருவாக்குவதை அறியமுடிகிறது. பண்டையக் காலங்களில் பொருளாசையை முன்னிட்டுப் போர்கள் பல நடந்துள்ளன

## பெண்ணுக்காகப் போர்

ஒரு பெண்ணை விரும்பிய வீரன் அவளை மணமுடிக்கக் கேட்கும் போது பெண்ணும், பெண்ணின் பெற்றோரும் உடன்பிறந்தோரும் விருப்பமின்றி மறுக்கும் போது பெண்ணை முன்னிட்டுப் போர் நிகழ்வதைப் பண்டைத் தமிழகத்தில் பார்க்கமுடிகிறது. தொல்காப்பி யர் இதனை, 'மகட்பாற்காஞ்சி' என்று கூறுகிறார். சங்க காலத்தில் பெண்களும், பெண் வீட்டாரும் சிறந்த வீரனுக்கும், தன்குடிக்கு ஏற்றவனுக்கும் தவிர பிறருக்குப் பெண் கொடுக்க மறுத்தனர். மறுத்தபோது மன்னன் போருக்குப் புறப்பட நீராடி நாளையப் போரில் வென்று அப்பெண்ணை மணமுடிப்பதாகவும், இல்லையெனில் அம்பு பொருந்திய தன் உடலை மண்ணில் வீழ்த்திப் பேரின்ப உலகம் புகுவதாகவும் வஞ்சினம் கூறிப் போருக்கெழுகிறான். மலையிலும், கடலிலும் கிடைக்கின்ற நல்ல பொருட்களுடன் வந்து பணிந்து பெண் கேட்டாலும் தன்குடிக்கு ஈடாக இல்லாதவர் களுக்கு மணம் செய்துதர பெண்ணின் தந்தை, தமையன்மார் மறுப்பதனை,

செல்வம் வேண்டார், செருப்புகல்; வேண்டி,

நிரல் அல்லோர்க்குத் தரலோ இல் என;

கழிப் பிணிப் பலகையர் கதுவாய் வாளர்

*(புறம்.345)*

என்ற பாடலால் அறிய முடிகிறது. பாரி மகளிரை அடைய விரும்பிய மன்னரை கபிலர் பாடும் பாடல்களில் மகள் மறுத்தல் பற்றிப் பேசப்படுகின்றது.

"மரந் தொறும் பிணித்த களிற்றினிராயினும்

புலந் தொறும் பரப்பிய தேரினிராயினும்

தாளிற் கொள்ளலிர்

வாளிற்றாரலன்" *(புறம்.109)*

"கடந்தடுதானை மூவருங்கூடி

உடன்றனிராயினும் பறம்பு

கொளற்கரிதே" *(புறம்.110)*

என்னும் பாடல்களாலும் புறம்-112ஆம் பாடலாலும் அறியலாம் மகட்பாற்காஞ்சித் துறையில் 333-354, 356ஆம் பாடல்கள் வரை பத்தொன்பது பாடல்கள் உள்ளன. இதில் பதினொரு பாடல்கள் ஊரே அழிவதற்கு ஒரு பெண் காரணமாகி விட்டாளே என்ற வருத்தத்தை, அவலத்தை விவரிக்கின்றன. பெண் பொருட்டு இடையறாது சமூகத்தில் போர் நிகழ்ந்தமைக்கு ஆதார மூலங்களாய் இலக்கியங்கள் இருக்கின்றன. தற்போது பெண்களை மையப்படுத்தி, போர் நடை பெறுவது என்பது இல்லை என்றே சொல்லு மளவில் உள்ளது. ஆனால் போர் எனில் பகைவனைப் பழிவாங்க, பெண்ணை இழிவு படுத்தும் போக்கு இன்றும் தொடர்கிறது.

## புகழுக்காகப் போர்

வீரயுகத்தில் வீரர்கள் போரின் வாயிலாகவே மதிப்பையும் புகழையும் ஈட்ட இயலும். அதனால் போரில்லா நாள் பிறவாநாள் என வருந்தினர். புகழ் மீது கொண்ட ஆவலால் மன்னர்கள் உயிரையும் கொடுத்துப் போர் புரிந்தனர்.

"புகழெனின் உயிருங் கொடுக்குவர்"(புறம்.18)

"உயிர் போற்றலையே செருவத்தானே"[5]

என்று பதிற்றுப்பத்தும் இதனை வலியுறுத்து கிறது.

தமிழ் மன்னர்கள் தம்புகழை நிலைபெறச்

செய்து தாமே இந்தப் பரந்த உலகம் முழுமையும் ஆண்டு, தம் புகழைப் பரப்ப முனைந்தனர். தன்னைப் புகழ்ந்த நா பிற மன்னர்களைப் புகழக் கூடாது எனப் புலவர்களுக்குப் பரிசில்கள் பல நல்கினர் அப்பரிசு கொடுக்கப் பொருள் தேவைப் பட்டதை முன்னிட்டுப் போருக்கு எழுந்தனர்.

இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு

இனிய செய்தி நின் ஆர்வலர் முகத்தே?

(புறம்.12)

தம் புகழ் நிறீஇத்தாம் மாய்ந்தனரே

(புறம்.165)

என்னும் பாடல்கள் இதனை எடுத்துரைக்கின்றன. பாண்டியன் நெடுஞ்செழியன் உலகை ஆளும் அரசர்களுடைய தோள் வலிமையை அழித்து தனது புகழை நிலைநாட்ட போர் மேற்கொண்டான் என்பதை புறம்.18 என்னும் பாடல் உணர்த்துகிறது.

உண்மையான வீரன், வீட்டில் நலமாக வாழ்வதைவிடப் போரில் புகழ்பட இறப்பதையே விரும்புகிறான். இதனைப் 'பெரும்புகழை முன்னிட்டு நீ வீட்டிலிருப் பதை விரும்பாமல் வெற்றி தரும் பாசறையில் தங்கியிருக்கின்றாய்' என்று கோவூர் கிழார் பாடியுள்ளார்.

"நல் இசை வேட்டம் வேண்டி, வெல் போர்ப்

பாசறை அல்லது நீ ஒல்லாயே" (புறம்.31)

எனும் பாடலால் அறியலாம். சேர அரசன் ஒருவன் தனது புகழை இவ்வுலகில் நிலை நாட்டவும் நிலவெல்லைகளை வெற்றி கொள்ளவும் கடும் போர் புரிந்ததை, புறம்.228 என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

"கடா அ யானைக் கணநிறை யலற

வியலிரும் பரப்பின் மாநிலங் கடந்து

புலவ ரேத்த வோங்கு புகழ் நிறீ இ"[6]

எனும் பதிற்றுப் பத்தும் பாடுவதை நினைவு கூரலாம்.

## தலைமை நிலைக்காகப் போர்

வீரத்தைப் பெரிதாக மதித்துப் போற்றிய சங்ககாலத்தில் தலைவன் என்பவன் ஒப்பில்லா வலிமையும், ஆற்றலும் உடைய வனாக, மக்களின் தந்தையாகக் கருதப் பட்டான். போராற்றல் உடையவனாக, அஞ்சா நெஞ்சுடன் போரென்று வரும் போது போர்க்களத்திலே பொழுதைக் கழித்து, களத்திலே வீரச்சாவு எய்தவும் துணிவுடை யவனாக இருப்பான். "பன்னூறு ஆண்டு கட்குமுன் உடல் வலியும், தறுகண்மையுமே தலைமை முடிவு செய்தன."[7]

தானே தனிப்பெரும் தலைவனாக விளங்க வேண்டுமென்ற ஆசையும், குறுநில மன்னர் கள் ஏவல் செய்து வழிபட வேண்டுமென்ற தலைமைப் பண்பும் போருக்குக் காரணமா கின்றன. "தம் படைவலிமை, தம் செங்கோல், தம் ஆணை, முதலியவற்றை யாவரும் ஒப்புக் கொண்டு தமது ஆட்சிக்கு உட்பட்டிருக்க தாம் அரசருக்கு அரசராகத் திகழ வேண்டும் என்ற உட்கோளே அக்கால அரசரின் போர்கள் பலவற்றிற்குக் காரணமாக உள்ளன"[8] என்று சு. வித்தியானந்தன் கூறுகிறார்.

"தண் தமிழ் பொது எனப் பொறா அன், போர் எதிர்ந்து

கொண்டி வேண்டுவன் ஆயின், கொள்க, எனக்

கொடுத்த மன்னர் நடுக்ககு அற்றனரே" (புறம்.51)

என ஒரு பாடல் உரைக்கின்றது. தமிழ் நாட்டை மூவேந்தர்க்கும் பொதுவானதாகக் கருதாமல் தன்னடிக்குரியது என்ற கொள்கையுடையவனாய் மாறன் வழுதி திகழ்ந்ததை,

"வேந்தரும் வேளிரும் பிறரும் கீழ்ப்பணிந்து

நின்வழிப் படா அராயி னென்மிக்கு"[9]

என்று பதிற்றுப்பத்து உரைப்பதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

"பணிந்து நிறை தருபநின் பகைவ ராயிற்

சினஞ் செலத் தணிமோ வாழ்க நின் கண்ணி"[10]

எனும் பதிற்றுப்பத்துப் பாடலும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இதன் வழியாகத் தலைமை

நிலையும் போருக்குப் பெரிதும் காரணமாக உள்ளதை அறிய முடிகிறது.

### தன்மான போர்

தன்னை இகழ்ந்து பேசுவதாலும் தன் வீரம் மதியாது எதிர்த்து வருகின்றவர்களை எதிர்த்தும், அவமானத்திற்குட்படுத்தும் போதும் தன்மானம் கருதிப் போர் தொடுக்கலாம். இது மனித வரலாற்றில் நிகழ்ந்திருக்கின்றது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், தன்னை இகழ்ந்து போரிட வந்தவர்களைக் கொன்றழிப்பேன் என்று வஞ்சினம் கூறிப் போர் தொடுக்கின்றான்.

"சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை

அருஞ்சமஞ் சிதையத் தாக்கி" (புறம்.72)

என்னும் பாடலால் இதனை அறியலாம். சோழன் நலங்கிள்ளியை எதிர்த்துப் போரிட வருகின்ற பகைவர்கள் அவனின் ஆற்றலை மதியாது இகழ்ந்து உரைக்கின்றனர். தன்னை இகழ்ந்து பேசியவரை அழிக்க அவன் போர் மேற்கொள்கின்றான். -

வன்றிணி நீண்முளை போலச் சென்றவுடன்

வருந்தப் பொரேஎனாயிற் பொருந்திய

(புறம்.73)

என்னும் பாடல் இதனைத் தெளிவுறுத்து கிறது. மதுரைக் காஞ்சியும் இதனை,

"இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்

பொருது அவரைச் செருவென்றும்

இலங்கு அருவிய வரை நீந்த"[11]

என மொழிவது இங்கு ஒப்புநோக்குதற் குரியது. தனது ஆளுமையை மதிக்காமல், தன்பெயருக்கு அவப்பெயர் வருமளவுக்கு இழிவாகப் பேசும் போது மன்னர்களிடையே போர் எழுந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

### ஆய்வு முடிவுரை

பிறநாட்டு மன்னர்களின் மண்மேல் கொள்கின்ற அளவு கடந்த ஆசை இருநாடு களுக்கிடையே பகைமையை ஏற்படுத்திப் பெரும் போர்கள் நடைபெறக் காரணமா கிறது. ஒரு நாட்டு மன்னன் இன்னொரு நாட்டு மன்னனையும் மக்களையும் அடிமைப்படுத்தி, தனக்குக் கீழ் வாழ வேண்டும். பணிந்து திறைப்பொருட்கள் கொடுக்க வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளும் போது சினமும் வெறுப்பும் வெளிப் பட்டு பெரும் போராக வெடிப்பதைக் காணலாம். தனது பெயரை நிலைநாட்ட நினைக்கும் போதும் சுதந்திரமான வாழ்வு மறுக்கப்படும் தருணங்களிலும் போர் எழுகிறது என்பதைப் புறநானூறு சுட்டிக் காட்டுகிறது. போருக்கான காரணங்கள் காலத்திற்கேற்ப மாறி அமைகின்றன.

### மேற்கோள் குறிப்பு

1.தமிழண்ணல், (உ.ஆ),தொல்காப்பியம், பொருள், 1008.
2. மேலது, 1013.
3. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), பதிற்றுப்பத்து, 66.
4. ரெ.முத்துக்கணேசன் (உ.ஆ),முத்தொள்ளாயிரம், 47.
5. துரைசாமிப்பிள்ளை மு.நூ., ப.76.
6. மேலது, 20.
7. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் புறப்பொருள், ப.7.
8. சு.வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.84.
9. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), மு.நூ., ப.75.
10. மேலது, 59.
11. பொ.வே. சோமசுந்தரனார் (வி.உ.ஆ.) மதுரைக் காஞ்சி, 55.

### துணை நூற்பட்டியல்

1. தமிழண்ணல், (உ.ஆ), தொல்காப்பியம், மீனாட்சி புத்தகநிலையம், மதுரை -625001, முதற்பதிப்பு- 2008.
2. துரைசாமிப்பிள்ளை. சு., (உ.ஆ), பதிற்றுப் பத்து, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை-1, மு.ப.1995.
3. முத்துக்கணேசன். ரெ.,(உ.ஆ), முத்தொள் ளாயிரம், முல்லை நிலையம், மண்ணடி, சென்னை-1, இரண்டாம் பதிப்பு -1995.
4. பாலசுப்பிரமணியன் கு.வெ., சங்க இலக்கியத்தில் புறப் பொருள், மீரா பதிப்பகம், புதுக்கோட்டை-622 001, முதற்பதிப்பு -1986.
5. வித்தியானந்தன். சு., தமிழர் சால்பு, பாரி புத்தகப் பண்ணை, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005, மூன்றாம் பதிப்பு -1985.
6. சோமசுந்தரனார்.பெ.வே., மதுரைக் காஞ்சி, திருநெல் வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிமிடெட், சென்னை-1, முதற்பதிப்பு -1956.